| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்** | |
| | **மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017** | |
| | **புவியியல்** | |

| | | |
|---|---|---|
| சுட்டெண் :- ........................................ | **தரம் : - 9** | **நேரம் :- 2. 00 மணித்தியாலம்** |

## பகுதி - I

❖ **கவனிக்க.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(01) வளிக்கோளத்தில் அதிகளவு சதவீதத்தில் காணப்படும் வாயு
(1) ஒட்சிசன் (2) நைதரசன்
(3) காபனீரொட்சைட் (4) ஆகன்

(02) ஞாயிற்றிலிருந்து வெளிவரும் புற ஊதாக் கதிர்களை புவியினுள் வரவிடாது தடுக்கும் ஓமோன் படை அமைந்துள்ள வளிமண்டலப்படை
(1) மாறன் மண்டலம் (2) இடை மண்டலம்
(3) படை மண்டலம் (4) வெப்பமண்டலம்

(03) உயர்நிலமொன்றின் உச்சியில் காணப்படும் பரந்த தட்டையான தரைத்தோற்ற அம்சம்
(1) சமவெளி (2) பள்ளத்தாக்கு
(3) மேட்டுநிலம் (4) மலைத்தொடர்

(04) 2050 ஆம் ஆண்டாகும் போது உலகில் 66 நாடுகள் தீவிரமான நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்கலாம் என எதிர்வு கூறியுள்ள அமைப்பு
(1) உலக சுகாதார தாபனம் (2) மத்திய சுற்றாடல் அதிகார சபை
(3) செஞ்சிலுவைச் சங்கம் (4) ஐக்கிய நாடுகள் சபை

(05) மிகப் புராதன நீர்வள நாகரிகங்களுக்கு உரிய மீயுயர் தொழில்நுட்பம் தோன்றிய கண்டம்
(1) ஐரோப்பா (2) ஆபிரிக்கா
(3) ஆசியா (4) வடஅமெரிக்கா

(06) தாய்வான், ஹெங்கொங் போன்ற நாடுகளில் பிரசித்தி பெற்ற கைத்தொழில்
(1) பொருத்தும் கைத்தொழில் (2) மோட்டார் வாகனக் கைத்தொழில்
(3) ஆடைக் கைத்தொழில் (4) கப்பல் கட்டும் கைத்தொழில்

(07) ஆசியாவில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பரவியுள்ள பிரதேசங்கள்
(1) வட, கிழக்கு ஆகிய வலயங்கள் (2) தென், தென்கிழக்குஆசிய வலயங்கள்
(3) தென், கிழக்கு ஆசிய வலயங்கள் (4) கிழக்கு, மத்திய ஆசிய வலயங்கள்

(08) மொங்கலொயிட் மனித வர்க்கத்தினர் வாழும் நாடுகள்
(1) ஜப்பான், அரேபியா (2) மலேசியா, சீனா
(3) இந்தியா, சீனா (4) பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்



kalvi.lk

(09) ஊவாப் பிரதேசத்தில் தோடம்பழப் பயிர்ச்செய்கைக்குப் பிரசித்தமான இடம்

(1) வெல்லஸ (2) மஹியங்கனை (3) பிபிலை (4) பண்டாரவளை

(10) எகிப்திய மக்களால் வணங்கப்பட்ட இயற்கைப் பொருட்களில் ஹேட்டர் என்று குறிப்பிடப்படுவது

(1) ஆகாயம் (2) சூறாவளி (3) சூரியன் (4) மரங்கள்

(11) சின்ரோ சமயம் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்ற நாடு

(1) தாய்லாந்து (2) மொங்கோலியா (3) சீனா (4) ஜப்பான்

(12) இலங்கையில் காணப்படும் ஈரநிலங்களில் ஒன்று

(1) மீரிகம (2) பள்ளமடு (3) கலமெட்டியா (4) தங்காலை

(13) இடவிளக்கப்படங்களில் பிரதான வீதி, சிறுவீதி என்பவற்றைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறங்கள் முறையே

(1) மஞ்சள், வெள்ளை (2) சிவப்பு, மஞ்சள் (3) கறுப்பு, மஞ்சள் (4) சிவப்பு, கறுப்பு

(14) கடற்கரையோரத்தில் காணக்கூடிய குத்துச்சாய்வு கொண்ட பாறைகள்

(1) முனைகள் (2) மணல்மேடுகள் (3) ஓங்கல்கள் (4) வன்பாறைகள்

- 15 தொடக்கம் 16 வரையான வினாக்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ் இரு நிரல்களிலும் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(15) மேல் மாகாணத்தில் இடம்பெறும் கைத்தொழில்கள் 'அ' நிரலிலும், அவை காணப்படும் பிரதேசங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. ரயர் கைத்தொழில் | (A) – ஒறுவல |
| 2. ஆடைக் கைத்தொழில் | (B) – சப்புகஸ்கந்த |
| 3. உருக்குக் கைத்தொழில் | (C) – களுத்துறை |
| 4. கனிய எண்ணெய் சுத்திகரிப்பு | (D) – களனி |

(1) CDBA (2) BDCA (3) BADC (4) DCAB

(16) வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் 'அ' நிரலிலும் அங்குள்ள பிரசித்தி பெற்ற இடங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வவுனியா | (A) – பரந்தன் |
| 2. மன்னார் | (B) – மாங்குளம் |
| 3. கிளிநொச்சி | (C) – ஓமந்தை |
| 4. முல்லைத்தீவு | (D) – முருங்கன் |

(1) DCAB (2) CADB (3) CDAB (4) BDCA



kalvi.lk

(17) இலங்கையில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட பலநோக்கு அபிவிருத்தி திட்டம்
(1) மகாவலி அபிவிருந்தித் திட்டம் (2) உடவளவைத் திட்டம்
(3) கொழும்புத் திட்டம் (4) கல்லோயாத்திட்டம்

(18) கிழக்குப் பிரதேசத்தில் கரையோர மீன்பிடித்துறை முகங்களை அபிவிருத்தி செய்வதற்காக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டம்
(1) கிழக்கின் உதயம் (2) வாழ்வின் எழுச்சி
(3) ஓடத்துறை விடியல் (4) திவிநெகும

(19) உலகிலுள்ள ஈர நிலங்களைப் பாதுகாப்பதன் பொருட்டு உருவாக்கப்பட்ட சர்வதேச ஒப்பந்தம்
(1) றம்ஸா ஒப்பந்தம் (2) மொன்றியல் ஒப்பந்தம
(3) றியோ ஒப்பந்தம் (4) வியன்னா ஒப்பந்தம்


(20) இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம்
(1) கட்டுநாயக்க (2) மாகம்புர
(3) மத்தள (4) பலாலி

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**(1)** கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் A – L வரையான ஆங்கில எழுத்துக்கள் குறித்துக் காட்டும் அம்சங்களை, அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.




[ மடகஸ்கார், யூரல்மலை, சுயஸ்கால்வாய், அத்திலாந்திக் சமுத்திரம், தாய்வான், நுல்லபார் சமவெளி, அமேசன் நதி, அரேபிய மேட்டுநிலம், லீனா நதி, கிறீன்லாந்து, யப்பான் கடல், பேரேரிகள் ]

(12 புள்ளிகள்)



kalvi.lk

**(2)** (i) தேசப்படத்தின் அடிப்படை அம்சங்கள் மூன்றையும் குறிப்பிடுக.

*(3 புள்ளிகள்)*

(ii) (a) இடவிளக்கவியல் தேசப்படங்களில் பயன்படுத்தப்படும் மூன்று திசைகளையும் பெயரிடுக.

*(3 புள்ளிகள்)*

(b) இலங்கையின் இடவிளக்கப்படங்கள் வரையப்பட்டுள்ள அளவுத்திட்டம் யாது?

*(1 புள்ளி)*

(iii) பின்வரும் பௌதிக, பண்பாட்டு அம்சங்களுக்குரிய வழக்கக் குறியீடுகளை உரிய நிறங்களைப் பயன்படுத்தி வரைக.

(i) மாகாண எல்லை

(ii) தேயிலை

(iii) நீதிமன்றம்

(iv) கடற்கரை

(v) குளம்

*(5 புள்ளிகள்)*

**(3)** (i) நீர்க்கோளம் என்றால் என்ன?

*(3 புள்ளிகள்)*

(ii) நீர்ப்பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்சினைகள் நான்கைக் குறிப்பிடுக.

*(4 புள்ளிகள்)*

(iii) நீர் மாசடைவதைத் தவிர்ப்பதற்கு முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*

**(4)** (i) ஆசியாவில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் மூன்றினைக் குறிப்பிடுக.

*(3 புள்ளிகள்)*

(ii) (a) ஆசியாவின் நான்கு சிறுத்தைகள் எனப் பெயர் பெற்று விளங்கும் நாடுகளை எழுதுக.

*(2 புள்ளிகள்)*

(b) ஆசிய வலய நாடுகளின் பிரச்சினைகளை இழிவாளவாக்க உருவாக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(iii) ஆசிய நாடுகளில் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பிரச்சினைகள் ஐந்து எழுதுக.

*(5 புள்ளிகள்)*



kalvi.lk

**(5)** (i) இலங்கையின் அபிவிருத்திப் பிரதேசங்களில் தென் பிரதேசத்தினுள் உள்ளடங்கும் மாவட்டங்களைப் பெயரிடுக.

*(3 புள்ளிகள்)*

(ii) (a) தென் பிரதேசத்தில் பரந்து காணப்படும் கனிய வளங்கள் நான்கு தருக.

*(2 புள்ளிகள்)*

(b) தென் பிரதேசத்தில் இடம்பெறும் கைத்தொழில்களில் நான்கைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(iii) தென் பிரதேசத்தில் விவசாய அபிவிருத்திக்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*

**(6)** (i) பின்வரும் நாடுகளின் பழங்குடிகளைக் குறிப்பிடுக.

(i) - அவுஸ்ரேலியா -

(ii) - பேரு -

(iii) - வட அமெரிக்கா -

*(3 புள்ளிகள்)*

(ii) சூழலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நான்கைக் குறிப்பிடுக.

*(4 புள்ளிகள்)*

(iii) சூழலுக்கு ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புக்களை இழிவளவாக்கி, சூழலைப் பாதுகாக்க எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாக விவரிக்க.

*(5 புள்ளிகள்)*



kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**

**075 287 1457**